தி. மு. க. பொதுக் குழு 31-ல் கூடுகிறது!

திராவிடநாடு

மலர் 11 | 31—5—53 | இதழ் 48

விலை 2 அணா

அரக்கோணத்தில் ஏற்பாடுகள்

ஐந்து மாத சாதனைகள்

முடிவுகளை எதிர்பார்ப்போம்

ஐந்து மாதங்களுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம், வருகிற 31–5–53 காலை 10 மணிக்கு வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த அரக்கோணத்தில், டவுன் ஹாலில், கூட இருக்கிறது.

பொதுக் குழு உறுப்பினர்கள் யாவருக்கும் தலைமைக் கழகத்திலிருந்து அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

தஞ்சையில் 14-12-52 அன்று கூடிய பொதுக்குழுவைப்போலவே, அரக்கோணம் பொதுக்குழுவும் பல முக்கிய முடிவுகளைச் செய்யலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த ஐந்து மாதங்களில் கழகம் சாதித்துள்ள பல காரியங்கள், மிகவும் கவனிக்கப்படக் கூடியதாகும். ஜனவரி 4-ல், நாம் மேற்கொண்ட "கைத்தறித்துணி விற்பனை நாள்", வாடிடும் கைத்தறியாளரின் குறை தீர்க்கப் பெரிதும் பயன்பட்டது என்பதை, அரசியலாரே தெரிவிக்கின்றனர். கைத்தறி ஆடைகளை அணியவேண்டுமென்கிற பெருத்த ஆர்வம், அன்று முதல் மக்களிடையே வளர்ந்து வருகிறது.

புயல் நிவாரண நிதி அளிக்கப்படவேண்டும் என்று தஞ்சைப் பொதுக்குழுவில் முடிவு செய்யப்பட்டது. அதனைச்சிறப்புற நடத்தி விட்டோம்—இன்று, அரக்கோணம் பொதுக்குழு கூடுகிறது.

மேற்படி காரியங்களைத் தவிர, கழக வளர்ச்சி சம்பந்தமாக மாநாடுகளும், மற்றும் பல நிகழ்ச்சிகளும் ஏராளம் நடைபெற்றிருக்கின்றன. கழகத்துக்கென மக்கள் தந்துவரும் ஆதரவு பெருகிவருகிறது.

அரக்கோணம் பொதுக்குழுவில் தான், கழகத்தின் புதிய நிர்வாகக் குழுவினரைச் சந்திக்கப்போகிறோம். கழக சட்ட திட்டப்படி, அண்மையில், நிர்வாகக் குழுவும், இரு துணைச் செயலாளர்களும், பொருளாளரும், பொதுச் செயலாளரால் நிறுவப்பட்டிருப்பது, யாவரும் அறிவர்

இந்நிலையில், கூடப்போகிறது, அரக்கோணம் பொதுக்குழு. அது, ஆய்ந்து பார்த்து, நிறைவேற்றும் முடிவுகளை எதிர்பார்ப்போம்.

மொந்தையும் 'கிளாசு'ம்!

"என்ன அக்கிரமம் இது?—அடுக்குமோ, ஐயன்மீர்! ஆச்சாரியார் இப்படியெல்லாம் பேசுகிறாரே—ஐந்து ஏகர், இவர் வீட்டுச் சொத்தா என்ன!", இவ்விதம், ஆங்காங்குள்ள காங்கிரஸ்காரர்கள் உறுமத் தலைப்பட்டுள்ளனர்.

தோழர் காமராஜ், அரசியல் தியாகிகளின் 'வக்கீலாகி', ஐந்து ஏகர் அவசியம் தரப்படவேண்டுமென்பதை, ஆத்திரமான வார்த்தைகள்மூலமும், 'ஆச்சாரியார், யார்?' என்று பிறரைக் கேட்கும்படித் தூண்டிவிடுவதன்மூலமும், கூறிவருகிறார்.

சுயராஜ்யப் போராட்டத்தின் போது, உயிரையும் வாழ்வையும் தத்தம் செய்த வீரர்களின் கல்லறைகளைக் கேலி செய்வது பித்தரின் செயல். நாட்டின் விடுதலைக்காக, உயிரையும், பொருளையும், குடும்ப சுகத்தையும், குழந்தை மழலையையும், தத்தம் செய்தோர் பலர். இந்திய பூமியில் என்றுமட்டுமல்ல, அடிமைப்பட்ட நாடுகளை மீட்கும் அறப்போரிலீடுபடும் இந்த அரசியல் வீரர்களின் பெயர்கள் அந்தந்த விடுதலை வரலாறுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். தவறல்ல, இது. மக்கள், அந்த அரசியல்வாதிகளுக்கு மாலையிடுவதும், மாவீரர் எனப் போற்றுவதும், சகஜம். இதுவும் தவறல்ல. ஆனால், அவ்விதம் போரிட்டோர், அரசியல் அதிகாரத்தைப் பெற நேர்ந்தால், 'மாரடித்ததற்குக் கூலி கொடு!' என்று கேட்பதுபோல, விடுதலைப் போரில் கலந்துகொண்டேன்—எடு, பணம்; கொடு, நிலம்' என்று கேட்கிற காட்சியை, இங்கே தான்—அதுவும் காங்கிரஸ் கூடாரத்தில்—காணமுடிகிறது.

விடுதலைப்போரில் கலந்துகொண்டதற்குக் கூலி!

சுயராஜ்யப்போரில் ஈடுபட்டேன், கொடு, நிலம்!

இவ்விதம், காங்கிரஸ் அதிபர்களே முடிவு செய்து ஆளுக்கு ஐந்து ஏக்கர், பங்கு போட்டுக் கொள்ளலாயினர்.

இவ்விதம் பங்கு போடும் வேலை, ஒவ்வோர் ஜில்லா கலெக்டரையும் இழுத்து அடித்தது.

நேற்றுவரையில் நிலத்தை உழுது பயிரிட்டவனிடமிருந்தும், கதிர் காண உழைத்த உழவனிடமிருந்தும், பற்பல நிலங்கள் பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டு, செல்வாக்கு மிக்க காங்கிரஸ்காரர்கள்வசம் போயிற்று. பல இடங்களில், இந்த அக்கிரமத்தைக் கண்டு, குமுறினர்—கொந்தளித்தனர், மக்கள். அவர்கள், மக்கள்தானே? தடியையும், சட்டத்தையும் காட்டி மிரட்டினர், காங்கிரஸ் அதிபர்கள்!

இப்போது, அன்பர் ஆச்சாரியார் ஐந்து ஏகர் நிலம் வாங்கும் முறையைக் கண்டிக்கிறார்.

"ஆச்சாரியார், யார்? அவர்மட்டும் அரசியல் பென்ஷன் வாங்கவில்லையா! மாதா மாதம் கவர்னர் ஜனரல் பென்ஷன் வருகின்றதே!—அது என்னவாம்?" என்று காங்கிரஸ்காரர்கள், சீறுகிறார்கள.

மொந்தைக் குடியன், 'கிளாஸ்' குடியனைக் கேலி செய்வதை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள்.

உண்மைதான்! காங்கிரஸ் காரர்களுக்கு, ஐந்து ஏகர் நிலமளிப்பது கூடாதென்று, ஆச்சாரியார். இதை போது பேசி வருவதையும், அதே நபர் மாதாமாதம் அரசியல் பென்ஷனைக் கைநீட்டி வாங்கி வருவதையும், சிந்திப்போர், திகைக்கவே செய்வர்—குடியன் கதை, ஞாபகம் வரும்.

அன்பர் ஆச்சாரியார், காங்கிரஸ் 'தியாகிகள்' மீது பாய்வதற்குக் காரணம் உண்டு. அந்தத் 'தியாகி'கள் யாவரும் காமராஜின் எடுபிடிகளாக இருக்கிறார்கள். அதனால் தான், ஆச்சாரியார் கூடாதென்றதும், சல்லடம் கட்டிக்கொண்டு தனது தோழர்களின் 'வக்கீலா'கிறார், தோழர் காமராஜ்.

காமராஜை, மக்கள் மன்றத்தில், இழுத்து விடுகிறார், ஆச்சாரியார் தன்னை 'நல்லவன்' எனும் போர்வை மூலம் போர்த்திக் கொண்டு!

ஆச்சாரியாரின் தந்திரம் அறிந்தவரென்றாலும், சூழ்ந்திருக்கும் காங்கிரஸ்காரர்களின் தொல்லைகளை 'அடைக்க', தோழர் காமராஜ், ஐந்து ஏகர் குறித்து, சிரத்தைக் கொண்டு அலைகிறார்.

மூலைத்தெரு முத்தன், கொடி தூக்கிகோவிந்தன், குப்பையர்தெரு குப்பன், இத்தகைய பட்டியலில் வருவோராயிருந்தால், 'ஜெய்ஹிந்த்! இதெல்லாம், மகாத்மாவுக்குப் பிடிக்காத விஷயம். போலோ, பாரத்மாதாகி, ஜே! பிறகு வருகிறேன்', என்று வந்து விடலாம்—'வக்கீல்' ஆகவேண்டிய அவசியமும் நேராது.

ஆனால், தோழர் காமராஜரைச் சூழ்ந்த வண்ணம், 'ஐந்து ஏகர்! ஐந்து ஏகர்!' என்று பஜனை செய்து கொண்டிருக்கும், கும்பலிருக்கிறதே, அது சாதாரணமானதல்ல—குடிசை புரியைச் சேர்ந்ததல்ல! கொடிதூக்கும் தொண்டர் குழாமல்ல!!

இருமினால் ஏழு எட்டுப் பேர் ஓடிவந்து நிற்கக் கூடிய வசதி, இரண்டு மூன்று கார், நஞ்சை புஞ்சை, இத்யாதி, வைபவங்களுடன் வாழும் 'ஏழைகள்' எனவே தான், ஆச்சாரியாரின் 'பொறி'யில் அகப்படுகிறார், காமராஜ்! அரசியல் தியாகபரம்பரையை ஆதரிக்கக் கிளம்புகிறார்!!

"ஆச்சாரியார் கூறுவது நியாயம் தானே? அரசியல் தியாகம் என்னும் பேரால் ஐந்து ஏகர் கூலி கேட்பது அநாகரீகமான காரியமாச்சே! காமராஜ் ஏன், இப்படிக் கதறவேண்டும்?" என்று காமராஜின்பால் பொதுமக்களுக்குக் கெட்ட எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடாதேயென்கிற சிரத்தைகொண்டோர், கேட்கலாம்—பலர், கேட்கிறார்கள்.

ஆனால், காங்கிரசின் இன்றைய அமைப்பை அறிந்தோர், இந்த 'பாகப்பிரிவினை'ச் சண்டையை,நன்றாக அறியலாம்.

"தரிசு, நிலம், சாமி! மைதான் வசம், உள்ளது. நமது கழனிக்கு அடுத்தாப்போலிருக்கிறது"—என்ற தலையாரி சொல்லக்கேட்கும் தர்மலிங்கம் ஒரு மிராசுதாரர். காங்கிரஸ் கட்சியிலிருந்து வருபவர். ஐந்து ஏகருக்கு. 'அப்ளை' செய்யும் அருகதையும் உண்டு. என்ன செய்கிறார், அவர்? எடுக்கிறார் கடிதம்! விடுக்கிறார், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவருக்கு!! கொடி தூக்கி கோவிந்தனல்லவே, தர்மலிங்கம். மறக்கவா முடியும்? நாளைய தினம் எலெக்ஷனுக்கு, தர்மலிங்கமன்றோ வண்டிவாகனமும்,பெட்டியைத் திறந்து பணமும், ஆள்வசதியும் அளிப்பவர். சிரத்தை சுழல்கிறார், காமராஜ்!

இதுபோன்ற 'தர்மலிங்கங்கள்' தான் ஐந்து ஏகருக்கு அடிபோடுகிறார்கள். மண்டையுடைந்தமாணிக்கம், மார்புகிழிந்து மாய்ந்த மணாளனை இழந்த விதவை விமலா, தந்தையை சுயராஜ்யப் போரிலிழந்த குழந்தைகள். இன்னோரன்ன உண்மைவீரர்களின், குடும்பங்கள், எங்கோ! எப்படியோ!! ஆனால், 'செல்வாக்குள்ள சீமான்கள்மட்டும் 'தியாகமே தியாகம்!' என்று, ஏலம் கூவுகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

ஓவர்ஸீயர் கோர்ஸ்

எல்லா எஸ். எஸ். எல். ஸி. மாணவர்களும் (தேறியவர்களும் தவறியவர்களும்) இந்த கோர்ஸுக்கு நேர்முக வகுப்பில் சேர்ந்தோ அல்லது தபால் மூலமோ படிக்கலாம். கலப்புக் கணிதம் அவசியமில்லை.

மாணவர்களுக்கு 1954 ஏப்ரலில் நடைபெறும் சென்னை சர்க்கார் பரீட்சைக்கு (லோயர் மற்றும் ஹையர் கிரேடுகள்) பயிற்சி அளிக்கப்படும். பரீட்சையில் தேர்வுபெறும் மாணவர்களுக்கு டிராப்ட்ஸ்மன் வேலைக்கு அருகதை உண்டு. மாதச் சம்பளம் ரூ. 70 பஞ்சப்படி ரூ. 24. சம்பளம் உயர்வு ரூ. 230 வரை உண்டு. இந்த ஸ்தாபனம் மாணவர்களுக்கு தக்க வேலைகளைத் தேடிக் கொடுக்க உத்திரவாதமளிக்கிறது. தபால் மூலம் படிக்கும் மாணவர்களுக்கும் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

ஹாஸ்டல் உண்டு.

பிராஸ்பக்டஸுக்கும் விண்ணப்ப பாரத்திற்கும் "பிரின்ஸிபால், மதராஸ் காலேஜ், 97, சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, மதராஸ்—2" விலாசத்துக்கு 12-அணாவுடன் மணி ஆர்டர் செய்யவும். மணி ஆர்டர் கூபனில் உங்கள் பெயர், விலாசத்தை கொட்டை எழுத்துக்களில் எழுதுங்கள்.

C. G. பிந்து மாதவ ராவ், B. Sc., B. E., A. M. I. E., (India)

காலேஜ் 23—6—1953-ல் ஆரம்பமாகிறது

கவனியுங்கள்: சென்னை ரீஜனல் எம்ப்ளாய்மென்ட் ஆபீசர் ஒரு பத்திரிகை அறிக்கையில் ஓவர்ஸீயர்களும், டிராப்ட்ஸ்மன்களும் பற்றாக்குறையாக இருப்பதாக கூறியுள்ளார்.

திராவிடநாடு

காஞ்சி] 31—5—53 [ஞாயிறு

களிப்பும் காணிக்கையும்

இரு வர்ணக்கொடி பெருமிதத்தோடு பறக்க, சுற்றிலும் தொண்டர்கள் சூழ்ந்துவர, முன்னும் பின்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் "திராவிட நாடு திராவிடருக்கே!" எனும் சங்கொலி எழுப்ப, கடந்த 23—5—53 தேதி, சென்னை ராயபுரம் கழகக் கட்டிடத்திலிருந்து இரண்டு பெரிய வண்டிகளில் ஏற்றப்பட்ட கைத்தறித் துணிகள், கொண்டுவரப்பட்ட காட்சியிருக்கிறதே!—நினைவில் நிலைக்கக்கூடியதாகும்.

ரூபாய் 27000க்கு மேற்பட்ட துணிகள், அவ்வளவு அழகாக எடுத்துவரப்பட்டன, பிராட்வே முனைக்கு அருகே பச்சையப்பன் பள்ளித் திடலில் கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் ஊர்வலத்தை வரவேற்றனர் உற்சாகமும், களிப்பும் கண்களிலே கூத்தாடலாயிற்று! அலங்கரிக்கப்பட்ட மேடையின் அருகில், துணிகளை அடுக்கிய திருவண்டிகளும், மக்களின் கவனத்தையும், மாற்றாரின் பெருமூச்சையும் பெற்றவாறு, நிறுத்தப்பட்டன.

புது ஆடைகள்மட்டுமல்ல! ஆங்காங்கு, ஒவ்வோர் வீடாகச்சென்று திரட்டிய பழைய துணிகள் வேறு—மூட்டை மூட்டையாகக் கிடந்தன!! இத்தனை துணிகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் புயல் நிவாரண நிதிக்குழு, சர்க்காருக்கு அளித்தது.

வேறு சர்க்காராக இருந்திருந்தால், தானேவந்து, மேற்படி துணிகளைப் பெற்றுக்கொண்டு நன்றி தெரிவித்துச் சென்றிருக்கும். ஆனால், நம்மை ஆள்வது, அரசியல் நாகரீகத்தைவிட ஆதிக்க மோகம் மிக்க சர்க்காரல்லவா? நேரில் வருமா! வராததுமட்டுமல்ல 'என்ன நடக்கிறது? எத்தனை மக்கள் வந்தார்கள்? அகப்பட்டுக் கொள்ளக் கூடிய வகையில் பிரசங்கம் செய்தார்களா? குறித்துவா!' என்று தனது இரகசியத்துாதரை, அனுப்பி வைத்திருந்தது.

தாங்கள் சேகரித்த உதவிகளை, மனமுவந்து, சர்க்காருக்கு அளிக்கிறது, தி. மு. க.

ஆனால், அதனை நன்றியறிதலோடு பெற்றுக்கொள்ள வேண்டிய அரசாங்கமோ, வரவில்லை — கலந்து கொள்ளவில்லை.

ஆனால், அரசாங்கத்தைப் பற்றி அன்றையதினம் கூடிக்கிடந்த மக்கள், நினைக்கவில்லை. எங்ஙனம் இயலும்? நினைப்பெல்லாம், களிப்பு! இதயமெல்லாம் இன்பச் சுழல்! வேறு இடம்?

•

முல்லைக் காட்டில் எருமை புகுந்தது போல, நெற் களஞ்சியத்தில் புயல் புகுந்ததையும், அதனால் சுமார் ஐந்துகோடி (சர்க்கார் விபரப்படி)க்கு மேல் சேதம் விளைந்ததையும், உழவர்கள் சிந்திய கண்ணீரோடும், ஏழைகள் குமுறிய நெஞ்சத்தோடும், வயல் பாழானோர் வானத்தைப் பார்த்துப்பெருமூச்சுவிட்ட பரிதாபத்தோடும், திகைத்து நின்றதை நாடு அறியும்.

அந்தத் திகைப்பைப் போக்கி, மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய ஆச்சாரியார் சர்க்கார், டில்லி சர்க்காரை நோக்கிக் கையேந்தி கெஞ்சிப் பார்த்துவிட்டு, ஏதும் கிடைக்காததால், 'ஈசனைப் பஜிப்பாய்!' என்று தாளாரசப்தத்தையும், தப்புரு ஸ்ருதியையும் மீட்டிக்காட்டிய வேடிக்கையை, உலகு, அறியும்.

விழுமின் ...ரீர்! மொழியிலே கலக்கம்! — திகைத்தனர், தஞ்சை திருச்சி மக்கள்.

நெஞ்சிலே துணிவு! உதட்டிலே திமிரான பதில்!! சர்க்கார் தன் பாதையில் சென்றுகொண்டிருந்தது.

ஏமாற்றும் எண்ணம்! 'ஏது பணம்' எனும் பேச்சு!! வழக்கம் போல், கண்ணிருந்தும் குருடனாக, காதிருந்தும் செவிடனாக, பேசாது இருந்தது, டில்லி ஆட்சி.

இந்த இக்கட்டான நிலை கண்டு, உள்ளம் துடித்தோம், நாம்! உலகு, ஏளனத்தோடு பார்த்தது, ஆட்சி அதிபர்களை!!

சோலையில் சுழன்றடித்த சூறாவளியால் சிதறுண்டு சிதைந்த சின்னஞ்சிறு பின்னமான மலர்க் கூட்டங்களைப்போல், மக்கள் வாழ்வு, கசங்கி கருகிப்போயிற்று. கவலை போக்க வேண்டிய சர்க்காரோ, 'கருணைபுரிவாய் இறைவா! கந்தா! கடம்பா! காமாட்சிமணாளா!' என்று, துதிக்குமாறு புத்தி போதித்தது.

வேதனைக்காளானோரோ வெந்து கொண்டிருந்தார்கள் — ஒரு பிடி சோறு! சின்னஞ்சிறு முழத் துண்டு! கண்களில் வழியும் நீரைத்துடைக்க சிறு முயற்சி!—அவரும் முன் வரவில்லை மாகாண அரசாங்கம், மன மருட்சியோடு, டில்லி பீடத்தைப் பார்த்து, பெருமூச்சு விட்டது. வேறென்ன செய்ய முடியும்? இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள், பாங்கிகள், பிரபல சேட்ஜிக்கள், ஆகியவைகளை அண்ணாந்து பார்த்தார், ஆச்சாரியார்! "ராம்! ராம்!!" என்று அவர் கற்றுக் கொடுத்த பாராயணத்தைப் பஜித்த வண்ணம், அங்கெல்லாம் அமர்ந்திருக்கும் வடநாட்டு அதிபர்கள், கண்ணை மூடிக் கொண்டனர். சிறு துரும்பும் தரவில்லை!

இந்த இக்கட்டான காட்சியைக் கண்டதாலேயே தஞ்சையில் கூடிய தி.மு. க. பொதுக்குழுவினர், தமது சக்தியானுசாரம்புயலால அவதியுறுவோருக்கு, ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அங்ஙனம், முடிவு செய்ததற்கு, இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று:—தஞ்சை, திருச்சி பால் தி. மு. கவிற்குள்ள, ஆழ்ந்த அன்பு.

இரண்டாவது:—இயற்கையின் நாசத்தால், மக்கள் பாதிக்கப்பட்டால், அவர்களுக்குக் கையாலான உதவியைச் செய்ய அரசியல் கட்சிகள் முன்வர வேண்டுமென்கிற பண்பை வளர்க்க வேண்டுமென்பது.

இதனை உள்ளத்தில் வைத்தே, தஞ்சையில் கூடிய மாபெரும் பொதுக்கூட்டத்தில், புயல் நிவாரணத்துக்கென, தி.மு.க. ரூ 25000 வழங்குமென்று பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

*

வேதனைக்காளான நமது சகோதரர்களுக்கு அன்பின் காணிக்கையாக, ஏதாவது செய்யவேண்டுமெனும் ஆசை அலை மோதிற்று. ஆனால், எங்ஙனம், அதனைச் செய்வது? உள்ளத்திலோ ஆசை! பையோ, காலி!!

பிட்டாபிரானகளும், ஆலையதிபர்களும் நிரம்பிய கட்சியாகயிருந்தால், 'இந்தா—ஒரு செக்!' என்று எளிதில், நிவாரண நிதிக்குத் தந்துவிட முடியும்.

தி மு. க. வில், ஏது, அவர்கள்? சில்லரையை எண்ணிப் பார்ப்போர் உண்டேயொழிய, 'செக்' புத்தகம் வைத்திருக்கும் கூட்டம் எங்ஙனம் இருக்க முடியும்? இதனால்தான், எங்ஙனம் உதவுவது என்கிற பிரச்னை உள்ளத்தைக் குடைந்தது.

"பார்! பார்!!—பெரிய மனுஷர்களின் கட்சியைப் போல், 25000 தருவதாக வாக்களித்து விட்டனர். எவன் தருவர்? கடைசியில் அவமானப்படுவார்கள்!"

"ஏனய்யா! பணம் பெருத்தவர் கவனிக்க வேண்டிய விஷயம். இந்தப் பஞ்சைகளுக்கென்ன?"

'சிறுபிள்ளைகள்! அவசரமாகக் கூறிவிட்டார்கள். ஐயோ, பாவம்!"

—இதுபோல, மற்ற அரசியல் கட்சிகள், நமது முடிவு கேட்டு பேசலாயின. எப்போது ஏளனம் செய்யலாம் என்று பேனாவையும் நாவையும் தீட்டிவைத்துக் கொண்டிருந்தனர்!

ஏதோ ஒன்றிரண்டு அரசியல் கட்சிகள் என்றல்ல, எல்லா அரசியல் கட்சிகளும், நமது முடிவைக் கண்டு, விதண்டமாக எழுதலாயின —பேசலாயின.

நமக்கோ, சிரிப்பு வந்தது! ஏனெனில், நமது அறிவிப்பைக் கண்டதும், இவைகளுக்கேன் இவ்வளவு அவசரமும் அச்சமும் ஏற்பட வேண்டுமெனும் ஐயத்தால். விஷயம் விளங்கியதும், வேதனையாக இருந்தது.

நமது முடிவைக் கேட்டு முகாரி பாடிய ஏனைய அரசியல் கட்சிகள், பண பலம் மிக்கவை — ஐந்து லட்சம் பத்து லட்சம் என்று 'பாங்கிக் கணக்கில்' பணம் வைத்திருக்கும் மாளிகையதிபர்களைக் கொண்டவை. ஆகவே, எங்கே பொதுமக்களின் கவனம், தம் பக்கம் திரும்பிவிடுமோ எனும் கவலையால், நம்மீது அனுதாபத்தையும் ஆத்திரத்தையும் வீசலாயின!

வழக்கம்போல அவர்களைக் கண்டு சிரித்தவண்ணம் மக்களை நோக்கினோம். மக்கள்தானே, நமக்கு — பணம்—சொத்து—'செக்' — எல்லாம்! மக்கள் மனமுவந்து, நன்கொடைகள் தந்தனர். நிதி, 25000க்கு மேல் போயிற்று. ஓட்டலில் வேலை செய்வோர்! கைவண்டி இழுப்போர்! சின்னஞ்சிறு கடைக்காரர்கள்! — இவ்விதம், வாழ்க்கையில் ஏழ்மைப்படுகுழியில் உழலும் இதயங்கள், வாரி வழங்கிய தொகைதான், இந்த ரூபாய் முழுவதும். ஏழையின் வேண்டுகோள், ஏழைகளின் இதயத்தில் குடியேறுகிற அளவுக்கு, பணக்காரர்களின் உள்ளத்தில் புகாது என்பது நாம் அறிந்ததுதானே—ஏழைகளின் இதயம், பஞ்சு போன்றது! பணக்காரர்களின் உள்ளம் இரும்பாலானது!! எனவே, நம் குரல் கேட்டது, தத்தமது சக்தியானுசாரம், மக்கள் உதவினர். திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தமட்டுமல்ல, வாழ வழி தேடி வெளியிடங்களுக்குச் சென்றிருப்போரும், விரும்பி அனுப்பினர். பம்பாய், ஆமதாபாத் இந்தோசீனம், மலேயா, பர்மா, இலங்கை முதலிய இடங்களில் வாழும் திராவிட மக்களும், தி மு. க. கிளைகளும், ஏராளமாக உதவலாயின.

மக்களின் பேராதரவோடு, வழக்கமான துறையான நாடகத் துறை மூலமும் ஆங்காங்கே பணம் சேகரிக்கப்பட்டது. கட்டணங்கள் மூலம் பொதுக்கூட்டம் நடத்தல் போன்ற புது முறைகளும் கையாளப்பட்டன. சென்னையின் பல பாகங்களிலுள்ள தி. மு. க. கிளைகள், வீடு வீடாகச் சென்று பணமும், பழைய துணிகளும் வசூலித்த நிகழ்ச்சிகள், மிக மிகப் பாராட்டப்படவேண்டியவை!

இந்த அளவு ஆர்வத்தோடு, ஏழை இனம், முயற்சி எடுத்துக் கொண்டு, ஏழைக்கட்சியின் வேண்டுகோளைப் பூர்த்திசெய்திருக்கிறது.

இது, மக்கள், நம்பால் வைத்திருக்கும் அன்பின் சின்னமாகும்! வேண்டுகோள் விடுப்பது எளிது—ஆனால், மக்களின் அன்பும் அனுதாபமும் இருந்தால்தான் அது நிறைவேற இயலும்.

அந்த அன்பும் அனுதாபம், நம்பால் மக்களுக்கு வளர்ந்து வருவதை, இந்த நிகழ்ச்சி தெளிவுபடுத்துகிறது.

மக்கள் காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும், தலை வணங்கி நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*

வசூலித்த பணத்தை, கைத்தறித் துணிகளாக ஆக்கி, அந்தத் துணிகளை, சென்னைக் கலெக்டர்மூலம் தஞ்சைக் கலெக்டருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்தத் துணிகளை, ஏழை எளியவர்களின் கைக்குக் கிட்டச் செய்யும் நடவடிக்கைகளை, அரசாங்கம், சரிவரச் செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

வசூலித்த பணத்தைப்பணமாகத் தருவதைவிட, கைத்தறித் துணிகளாகத் தருவது, மிக மிகச் சிறந்த முடிவு. புயலால் வாடியோருக்கும் உதவி! வறுமைப் புயலால் வாழத் தவிப்போருக்கும் உதவி!—இந்த நோக்கத்தோடு, கைத்தறித் துணிகள், வாங்கப்பட்டு, அன்று ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு, சர்க்கார் வசம் ஒப்புவிக்கப்பட இருக்கிறது.

இந்த அன்பின் காணிக்கையை, தஞ்சைத் திருச்சி மக்களுக்குச் சமர்ப்பிக்கும் பணியினை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகப் புயல நிவாரண நிதிக்குழுவினர்.

அவர்களையும், மேற்படி குழுவின் செயலாளரான தோழர் மு. கருணாநிதியையும், மனமாரப் பாராட்டுகிறோம்.

மேற்படி குழுவின் முயற்சிக்கெல்லாம் தம்மாலியன்றளவு ஒத்துழைத்த நடிப்புப் புலவர் கே. ஆர். ஆர். அவர்களின் நடிகக் குழுவினருக்கும், கலைஞர்கள் — என். எஸ். கிருஷ்ணன், கே. ஆர். ராமசாமி, எம். ஜி. ராமசந்தர், சிவாஜி-கணேசன் முதலியோருக்கும் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இயற்கைக் கொடுமைக்கு ஆளான, மக்களின் கண்ணீரைத் துடைக்க இத்தோழர்கள் மேற்கொண்ட பணியும், அன்புள்ளமும் திராவிடத்தின் உள்ளத்தில், என்றும் நிலைத்து நிற்கும்.

எடுத்த காரியத்தை வெற்றிகரமாக்கித்தந்த மக்களின் பேரன்புக்கு மீண்டுமொருமுறை நன்றி தெரிவித்துக்கொண்டு, தி. மு. க. வின் அன்பளிப்பை, புயலால் வாடியோருக்குக் காணிக்கையாக்குகிறோம்.

ஈ. வெ. கி. சம்பத்

மாயூரம் வட்டச் சுற்றுப் பயணம்

1-6-53 திங்கள் திருவிளையாட்டம்
2-6-53 செவ்வாய் திருமங்கலம்
3-6-53 புதன் மங்கைநல்லூர்
4-6-53 வியாழன் சங்கரன்பந்தல்
5-6-53 வெள்ளி பொறையார்
6-6-53 சனி செம்பனார் கோவில்
7-6-53 ஞாயிறு மாயூரம்.

"மனிதன் உயர்ந்தவன்"—எதனால்?

[மறைந்த சாமி கைவல்யம் அவர்கள் 1928-ல் தீட்டிய ஓர் அரிய சிந்தனை விருந்து]

கூடி வாழ்தல், சிநேகம், அன்பு ஆகிய இவைகளை மனிதர்கள் எக்காலத்தும் விரும்புவது. இப்படி எக்காலத்தும் சதா விரும்பும் மனிதனுடைய ஸ்வரூபத்தைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாதென்றே சொல்ல வேண்டும். மனிதன் பிறக்கிறான்; பின்பு அவன் இறக்கிறான். அவன் எங்கிருந்து வருகிறான்? எங்கே பின்னர் போகிறான்? என்பதே நமக்குத் தெரியாது. ஒருவன் கவியாகவும் மற்றொருவன் போர் வீரனாகவும் இருக்கிறான். இவைகள் இப்படி இருக்கக் காரணம் என்ன என்பதும் நமக்குத் தெரியாது. மனிதன் உயிரோடிருக்குங்கால் மூச்சு விடுகிறான். அவன் இறந்த பின் மூச்சு நின்றுவிடுகிறது. மூச்சு விட்டுக்கொண்டிருந்தது யாது? மூச்சில்லாது கிடப்பது யாது? நாம் பிறக்கக் காரணமென்ன? நாம் எங்கே போகிறோம்? மரணத்தோடு நம் வாழ்க்கை முடிந்ததா? நாம் ஆத்மாவா? அனாத்மாவா? மனமா? இந்திரியங்களா? அல்லது ஒன்றுமேயில்லையா? என்ற இந்தச் சங்கைகளுக்கு எந்த தேசத் தத்துவ சாஸ்திரங்களும் தக்க விடை கொடுக்க முடியவில்லை. இம்மாதிரியான பெரிதாயும் ஆழ்ந்ததாயும் உள்ள இரகசியங்களால் மனிதன் சூழப்பட்டிருக்கிறான். இதை அறிய நாம் எவ்வளவு முயன்றாலும் நம்மால் ஆவதில்லை. இம்மாதிரியான இருளில் நாம் தத்தளிக்கிறோம் என்பதை உணர்ந்துதான் மேனாட்டு தத்துவ சாஸ்திரிகள் "நாம் எப்பொழுதும் விடாது அதிநுட்பமான விஷயங்களோடேயே சம்பந்தப்பட்டிருக்கிறோம். மனிதன் ஒரு பதருக்குச் சமானம். அவனுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. தன்னைப் பற்றி அவனுக்கிருக்கும் அஞ்ஞானத்திற்கு அளவேயில்லை. அதுபோல இவ்வுலகமாம் பெரிய யந்திரத்தை அறிவது அசாத்தியம். அதிலிருக்கும் காரிய காரண சம்பந்தத்தை முழுவதுமறிய முடியாது. நாம் இன்னார் என்பதும் நமது ஸ்வரூபம் இன்னதென்பதும் அறிய முடியாது" என்று சொல்லுகிறார்கள். இவையனைத்தும் அதிக பழக்கத்தாலுண்டாகும் மந்த குணத்தைச் சிதற அடித்த மனிதர்களின் வாக்கியங்கள் என்றாலும், சமுத்திரத்தில் மீனுக்காக அலைகளை எளிதில் தாண்டிச் செல்லும் செம்படவனுக்குச் சமுத்திர ஒலியின் கம்பீரமும் அதிலுண்டாகும் புயல்களின் கம்பீரமும் எவ்வாறு தோன்றாதோ, அவ்வாறு ஓயாது சமுத்திர அலைபோல மோதிக்கொண்டிருக்கும் விஷயங்களைக் கவனியாது அவைகட்கு அப்பாற்பட்டு நிற்கும் வழி தோன்றாது. அதிகப் பழக்கத்திற்கு ஆளாகிக் கெட்டுப்போகும் மனிதர்கள் நிறைந்த இவ்வுலகில் பிரபஞ்ச விசித்திரம், அதன் ரகசியத்தின் பெருமை அதைப் பூரணமாக அறியமுடியாது என்பவைகளையும், நமது அறிவின் சிறுமையையும் உள்ளபடி உணரும் சக்தி ஒன்று உண்டென்றும், அது வருவதற்கே ஈஸ்வர கிருபையென்றும், ஞானமென்றும், புண்ணியமென்றும், தவமென்றும் சொல்லி, அதை அடைவதற்கே கடவுள் பக்தியென்றும், யோகமென்றும் கர்மமென்றும் வழிகாட்டி, அவ்வழியில் நடக்கும் திறமை வருவதற்கே சமத்துவம், சகோதரத்துவம், தன்னலம் விரும்பாமை முதலிய குணங்கள் நிறைந்தால் இப்பிரபஞ்ச வாழ்க்கையின் விசித்திரத்திலும் அதற்கு அப்பாற்பட்ட ஞானத்தின் ஆனந்தத்திலும் இருக்கும் மனிதனே எல்லா ஜெந்துக்களைவிட உயர்ந்தவனாவான் என்பதும் தேசப் பெரியவர்கள் வாக்கு.

நம் தேசப் பெரியவர்கள் கண்டு அறிந்து அனுபவித்த ஞானம் எல்லாம் நமக்கு உதவியாகவே இருக்கின்றன. அவைகளின் சகாயத்தின் பேரிலும் நமது சிற்றறிவிற் கெட்டிய வரையிலும் அகங்காரம் நிறைந்த விசித்திர ஜந்துவாகிய மனிதனது ஸ்வரூபத்தைப் பற்றி விவரிப்போம். மனிதனை சகல ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். மனித தேகத்தின் ஸ்வரூபத்தை நோக்கில் இதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. மனித தேகம் எவ்வளவு விசித்திரமாக விருந்த போதிலும் மனிதனைவிட அதிக பலம், அழகு, கம்பீரம் முதலிய சிறப்புவாய்ந்த சரீரங்களையுடைய ஜந்துக்கள் காணப்படுகின்றன. குதிரையே நல்ல தேகக் கட்டுடையதென்று பிரகிருதி சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நல்ல கொம்பன் யானைக்கிருக்கின்ற கம்பீரம் நல்ல மல்லனுக்குக் கூட இல்லை. சிங்கத்திற்குள்ள பார்வை நல்ல வம்சத்திற் பிறந்த அரசனுக்குக் கூட இல்லை. சிறந்த காளை மாட்டின் நடையானது போர் வீரனது நடையைப் பழிக்கும் திறனுடையது. கான மயிலாடக் காணும் கண் குளிரும் காட்சியைக் காட்டும் நடன மாதரிடமும் காணோம். ரம்பைக்குக்கூட பஞ்சவர்ணக்கிளியின் அழகு இருந்திருக்காது. படமெடுத்தாடும் சர்ப்பமும் ஆகாயத்தில் அசையாது உருவிச் செல்லும் கருடப் பட்சியும் அபூர்வ ஜெந்துக்கள். ஆகையினால் தேக விஷயமாகப் பார்க்குங்கால் மனிதன் மற்ற ஜெந்துக்களைவிட தேகத்தில் சிறப்பு வாய்ந்தவனென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால் மனிதனுக்குச் சிறப்பு அவன் தேகத்தால் உண்டாவதில்லை. அவன் மேன்மையும் நிமிர்ந்த முகத்தால் அவனுக்குண்டாகும் கம்பீரமும் முக்கியமாக அவனுக்குள் ஆடி ஒளிரும் அறிவினது சத்திய நெறியின் சிறப்பால் உண்டாகின்றன.

இனி, மனிதனது சிறப்பு, தேகத்தைவிடச் சிறந்தனவாகிய இந்திரியங்கள் மனம் ஆகிய இவைகளால் உயர்வு உண்டாகின்றதோ என்பதை விசாரிக்கப் புகுவோம். இந்திரிய வியாபாரங்களை மாத்திரம் நாம் தனியாகப் பார்த்தால் மனிதன் மற்ற ஜந்துக்களைவிட மிகத் தாழ்ந்தவனாகப் போகிறான். உற்று நோக்குங்கால் "புலி கரடி முதலியவைகள் கூட நல்லவைகள்" என்ற மதிப்பை நமக்கு உண்டாக்கும் குணம் வாய்ந்தவர்கள் மனிதர்களுள் அநேகர் காணப்படுகிறார்கள். புலிக்கும் கரடிக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள இரைகளுண்டு. மனிதனுக்கு இவற்றில் எல்லையில்லை. ஆடுமாடுகள், இன்னும் பூமியில் உலாவும் மிருகங்கள், ஆகாயத்தில் பறக்கும் பட்சிகள், சமுத்திரத்திலுள்ள மீன்கள், சமுத்திரத்தின் வழியாக ஓடும் ஜீவ ஜெந்துக்கள் ஆகிய எல்லாம் மனித விரோதிகளாக ஏற்படலாம். எறும்பு முதல் மனிதர் பரியந்தம் உள்ள ஜீவராசிகளில் எதைத்தான் மனிதன் தன்னலம் கருதி வருத்தாது விடுகிறான்? இந்திரிய வியாபாரப் பழக்கத்தில் மேலான உறவுகள் எல்லாம் சிதறிப் போகின்றன. தாயாதி என்ற நெருங்கின உறவைக் காட்டும் ஓர் பதம் விரோதி என்ற பொருளைக் கொடுக்கும் நிலைக்கு வந்து விட்டது. சிலந்தியும் எறும்பும் அநேகருக்கு நற்போதனை செய்திருக்கின்றன. பசுவின் சாத்வீகம் பழமொழியாகி விட்டது. பாம்புகள் தமக்குள்ள சங்கீத அனுபவ சக்தி புஷ்பங்கள் வாசனை முதலியவற்றை அனுபவிக்கும் சக்தியாகிய இவைகளால் கவிராயர்களைப் பழிக்கும் திறனுடையவையாகின்றன. மனிதனது அளவிட முடியாத சபலக்கநுதல், வீண் பெருமைபேசல், கொடுமை, தற்புகழ்ச்சி, விளையாட்டுத்தனம் ஆகிய இவைகளைப் போன்ற பிசாசுகுணங்களை ஆழ்ந்து நோக்கினால், தனது சமூக வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் தற்கொலை செய்து கொண்டால் நலமாக இருக்குமென்ற எண்ணம் வந்திராத மனிதன் இருப்பது அபூர்வம். இதை நினைத்துத்தான் மனிதன் சும்மாவிருக்கக் கற்றுக் கொண்டாலுமில்லை, உலகிலுள்ள அனாவசிய துக்கங்களும் பறந்தோடிப்போம் என்றார் கார்லைல் என்ற பிரகிருதி சாஸ்திரி. மனிதன் அவ்வாறு இருக்கமுடியாது. கீதையில் கிருஷ்ணன் சொன்னதுபோல சதா கர்மங்களைச் செய்துகொண்டு பிறப்பு இறப்பு ஆகிய இவைகள் வளர்வதற்கு வேண்டிய வித்தை விதைத்துக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. சிங்கத்தினது கோபமும், யானையினது மாறுபாடும், புலியினது கொடுமையும், பாம்பின் விஷமும், நரியின் தந்திரமும், பன்றியின் ஆபாச குணங்களும், எலியின் கெட்ட குணமும் மனிதனிடம் குடிகொண்டிருக்கின்றன. சிற்சில சமயங்களில் முற்கூறிய ஜந்துக்களைவிட அதிகமாகவும் போய் நடந்துகொள்ளுகிறபடியால் அவன் ஸ்திரமும் வரவரப் பலமாகும் குணமுள்ளதாயும் ராகத் துக்கங்களாகியதாயும் ஆகிறான். சிலந்தி தன் வலையை உண்டாக்குவதைப்போல ஸ்வபாவமாகவே உண்டாக்கிக்கொண்டு வருவதால் மனதிலும் இந்திரியங்களிலும் மற்ற ஜெந்துக்களைவிட மனிதன் உயர்ந்தவன் என்று சொல்லுவதற்கில்லை.

மனிதனது அறிவின் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவன் ஜீவராசிகளைவிடச் சிறப்பு வாய்ந்தவனாகக் காணப்படுகிறான். இதில்தான் அவனுக்கு ஏற்றம் சற்று காணப்படுகிறது. தனது கணித விஷயங்களில் மனதை இழந்துகிடந்த நியூடனும் மடச்சிகரத்தில் நின்று சந்திரமண்டலத்தைத் தனது தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலமாகப் பார்த்து ஆனந்திக்க காலிலியோ என்ற வானசாஸ்திரியும் இன்னும் அபூர்வத்தைக் கண்டு ஆனந்தப்பட்டவர்களும் நம் தேசத்து யோகிகளும் சித்தர்களும் அறிவில் ஈடுபட்டு பிரபஞ்சத்தை மறந்த மகான்களல்லவா? இப்பேற்பட்டவர்கள் நம்முன் எவ்வளவு அபூர்வமாகக் காணப்படுகிறார்கள். மிஞ்சியிருக்கும் ஜனங்களைப் பாலைவனத்தோடு ஒப்பிட்டால் இவர்கள் எவ்வளவு அபூர்வம்! ஒவ்வொருவனுக்கும் அறிவுடண்டு. இது இந்திரிய வியாபாரங்களோடு பேதாபேதமின்றிக் கலந்திருப்பதால் அது அவனை வெகுகாலம் காப்பாற்றுவதில்லை. அது பிரபஞ்ச விஷயங்களாகிய கொடிய சமுத்திரத்தில் இடைவிடாது அவனைத் தத்தளிக்கச் செய்யும் புயலாக ஏற்படுகின்றது. மனிதன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச் சிறந்ததே. ஆனால் வக்கீல் ராஜ்யவாதி போன்றவர்களிடத்தில் அது சிறுத்து காணப்பட்டு பொதுவாகவும் சிறப்பாகவும் ஜனங்களுக்குக் கெடுதலாக முடிகின்றது. அற்பமான தேகத்தோடும் இழிவான இந்திரியங்களோடும் மிக்க குறைந்த சக்தி வாய்ந்த அறிவோடும் கெட்ட குணம் வீண்பெருமை அறியாமை ஆகிய இவைகளோடும் நாமிருந்து கொண்டு நம்மை அறிவாளி என்று நினைப்பது பொருந்தாது.

அறிவாளியாக இருக்க வேண்டுமானால் மனமும் இந்திரியங்களும் சுத்தப்படவேண்டும். இவைகள் சுத்தப்படவே கோவில், தெய்வ வழிபாடு, ஆசார அனுஷ்டானம் இத்தனையுமுண்டாயினவாம்! ஆனால் அவையனைத்தையும் தன் பக்கமே தன் லாபத்தின் பிழைப்பின் பெருமைக்கே திருப்பி அநேக அக்கிரமங்கள் செய்யப்படுவதால் எல்லோர் முன்னும் நிற்கிறது. அவைகளைத் தையும் சேர்த்து நினைவிலொழிய மனமும் இந்திரியங்களும் சுத்தப்பட்டது என்பதை நாம் தெரிந்துகொள்ளும் வரையில், அதினால் நாம் அடையும் பலனுமொன்றுமில்லை. உயர்ந்த ஜாதியென்று நினைத்து, யாரையும் தொடாமலிருப்பதனாலேயே மனம் சுத்தமாகாது. அறிவு வந்துவிடாது. இந்திரிய சேட்டையும் போகாது. மதக்குறி பணித்து கோவிலுக்குப் போய் கன்னத்திலடித்துக் கொண்டாலும் மனம் சுத்தியாகாது, இந்திரிய ஆதிக்கம் குறையாது. ஆயிரங்குடம் பத்தை அனுபவித்து ஒரு ஆட்டுத் தலைகண்டு ஜீவகாருண்யமென்று தேகத்தையெல்லாம் குழைத்துக்கொண்டாலும் மனதிற்கு இரக்கம் வந்துவிடாது; இந்திரியங்களின் கொடுமை போய்விடாது. விசாரணை செய்து பார்த்தாலே அறிவின் தன்மை புலப்படும். அப்பொழுதுதான் மனிதன் மற்ற ஜீவராசிகளில் மேற்பட்டவனாகக் காட்ட முடியும்.

புத்தியின் மற்றைய பாகமே கற்பனாசக்தியென்ற ஓர் சக்தி மனிதனிடமிருக்கிறது. அதுதான் மனிதனது சுற்றம் எல்லாவற்றையும் அறியும் திறனுடையது. இதுதான் விசாரணையினால் உண்டாகிறது. மனம், இந்திரியம், அறிவு இவைகளையும் போட்டு விசாரணை என்னும் மத்தால் கடைந்தால் உண்டாகும் வெண்ணெய்க்குத்தான் சித்த சக்தி என்று பெயர். இந்தச் சக்திக்குத்தான் கடவுள் அருள் என்றும் கடவுள் கடாட்சமென்றும் ஞானமென்றும் சொல்லுவது. தேகம், மனஸ், இந்திரியங்கள் முதலிய பிரபஞ்சமெல்லாவற்றையும் அப்பாற்பட்டு ஆனந்திக்கும் சக்தியும் அதுவே. மனிதனுக்கு உடைமையாக ஏற்பட்டுள்ள பெரும உரிமை பெருஞ் செல்வம் மலைகள், ஆறுகள், பிரபஞ்சத்தில் காணும் அதனையும் கண்டு களித்து பிரபஞ்சத்தோடு கலந்து ஆனந்தப்படுவது அந்த சக்தியே. இந்த நிலையிலுள்ள மனிதன் எல்லாவற்றைவிட உயர்ந்தவன்.

★

நடைபெற்றவை

திருநெல்வேலி: 19—5—53-ல் தி. மு. க. சார்பில தோழர் காசிலிங்கம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மீ. சு. இளமுருகு பொருட்செல்வி, சமதர்மம், தோழியர் பொற்செல்வி இளமுருகு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தூத்துக்குடி: 20—5—53 மேல் சண்முகபுரம் தி. மு. க. சார்பில தோழர் இரா. சு. தங்கப்பழம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி, தோழியர் பொற்செல்வி இளமுருகு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

அரசாங்கப் பொருளாதாரம்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்.]

வருமான வரி

ஒருவருடைய வரி கொடுக்கும் சக்தியை அளவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் வரி விதிப்பதற்கு வருமானவரி ஒரு சிறந்த சாதனம். அரசாங்கத்துக்கு இந்த வரியின் மூலம் எப்பொழுதும் நல்ல வருமானம் கிடைப்பது மட்டுமல்லாமல் வேண்டும்பொழுது வரியைச்சிறிது உயர்த்துவதன் மூலம் வருமானத்தைக் கணிசமாக பெருக்கிக் கொள்ளவும் முடிகிறது. இந்தியாவில் 1938—39-ம் வருஷத்தில் வருமானவரி மூலம் அரசாங்கத்துக்கு 15.24 கோடி ரூபாய் கிடைத்தது. இன்று 160 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது.

வருமான வரி இல்லாவிட்டால் தற்காலத்தில் அரசாங்கங்கள் மிகவும் கஷ்டப்பட நேரிடும். இந்திய அரசாங்கத்தின் மொத்தவருமானம் சுமார் 425 கோடி ரூபாய். அதில் ஏறக்குறைய 160 கோடி ரூபாய் வருமான வரியிலிருந்து கிடைக்கிறது. பிரிட்டனிலும் மொத்த வருமானத்தில் மூன்றிலொரு பங்குக்கு மேல் வருமான வரியிலிருந்துதான் கிடைக்கிறது.

வருமான வரியை யார் செலுத்துகிறார்களோ அவர்களே அதன் சுமையையும் தாங்கிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் விரும்பினாலும் யார் பேரிலும் அவர்கள் மாற்றிவிட முடியாது. வருமானவரி, சொத்துவரி இவைகளைப் போல் மற்ற வரிகளைப்பற்றி நாம் நிச்சயமாய் இருக்க முடியாது. அரசாங்கம் ஒருவருடைய சக்தியைப் பார்த்து அவர் மேல் வரி விதிக்க அந்த வரிச் சுமையை அவர் மற்றவர்மேல்—சக்தியில்லாதவர்கள் மேல் கூட மாற்றிவிடுவாரானால், அரசாங்கத்தினுடைய நோக்கம் நிறைவேறாது. ஆனால், வருமானவரி விஷயத்தில் இம்மாதிரி நேராது.

வருமான வரி நியாயமானதாயிருக்க வேண்டுமானால், அரசாங்கம் சில விஷயங்களை கவனிக்க வேண்டும். வருமானம் எவ்வளவு, அது சொந்த முயற்சியில் சம்பாதித்ததா அல்லது பிறருடைய உழைப்பின் பயனா அல்லது அதை எதிர்பாராமல் கிடைத்ததா, வரி செலுத்துபவரின் நிலைமை என்ன, குடும்ப பாரம் எவ்வளவு என்ற இவை போன்ற விஷயங்களை ஆராய்ந்தே வரி விதிக்கப்பட வேண்டும்.

எல்லா அரசாங்கங்களும் ஒரு குறைந்த அளவை நிர்ணயித்து, அதற்குக் கீழே உள்ள வருமானங்களை நீக்கி, அந்த அளவுக்கு மேலேயுள்ள வருமானங்கள் பேரில்தான் வருமான வரியை விதிக்கின்றன. இந்தியாவில் இந்த வரி இல்லாத வருமான அளவு 1952-53-ல் ரூ 3500 ஆகவும் 1953-54-ம் ஆண்டுக்கு ரூ 4200 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ரூ 3500-லிருந்து ரூ 4200-க்கு அந்த அளவை உயர்த்தினதால் வருமானவரி செலுத்தும் 7-லட்சம் பேரில் 70,000-பேர்கள் வருமான வரி விலக்கு அளிக்கப்படுவார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் வரி விதிக்கும்போது, ஒருவர் விவாகம் ஆனவரா, விவாகம் ஆகாதவரா என்று பார்த்து, விவாகம் ஆகாதவருக்கு வரி இல்லாத வருமான அளவை சற்று உயர்த்தியும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் விவாகமாகாதவர்களுக்கு வருஷத்துக்கு 135 பவுனுக்குமேல் வருமானம் இருந்தால்கூட வரி உண்டு. விவாகமானவர்களுக்கு 225 பவுனுக்குமேல் வருமானத்தின் பேரில்தான் வரி உண்டு.

மேனாடுகளில் அநேகமாக குடும்ப பாரத்தை அனுசரித்தே வருமான வரி விதிக்கப்படுகிறது. பிரிட்டனில் முதற் குழந்தைக்கு 36 பவுனும் பிறகு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 26 பவுன் என்றும் கணக்கிட்டு அதையும் வரி விதிக்காத வருமான அளவுடன்சேர்த்து விடுகிறார்கள்.

இந்தியாவில் இவ்விதம் குடும்ப பாரத்தை உத்தேசித்து மேற்சொன்ன சலுகைகள் காண்பிக்கப்படுவதில்லை.

இன்னும் சொந்த முயற்சியில் வந்த வருமானமாயிருந்தால், குறைந்த வரியும், பிறருடைய சொத்து அல்லது வருமானத்திலிருந்து பெற்ற பங்காயிருந்தால் அதிக வரியும் மேனாடுகளில் விதிக்கப்படுகின்றது. இந்தியாவில் அவ்விதம் வித்தியாசம் பார்ப்பதில்லை.

இந்தியாவில் வரியில்லாத ஒரு அளவுக்குமேல் உள்ள எல்லா வருமானங்களின் மேலும் உயர்ந்த விகிதாசார முறையில் படிப்படியாக அதிகமதிகமானவரி விதிக்கப்படுகிறது. 25000 ரூபாய்க்குமேல் வருமானமுடையோரின்மீது 'மிகுவரி' விதிக்கப்படுகிறது. அதிக வருமானமுள்ளவர்களிடமிருந்து ரூபாய்க்கு $8\frac{1}{2}$ அணாகூட வரியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

வருமானவரி விதிப்பதில் சிலகஷ்டங்களும் இருக்கின்றன. ஒருவருடைய உண்மை வருமானத்தை கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. அதுவும் இந்தியாபோன்ற நாடுகளில் பாங்குகளில் பணம் சேமித்து வைக்கும் பழக்கம் இல்லாததால் ஒருவருடைய சொத்தையோ வருமானத்தையோ கணக்கிடுவது சிரமம். அநேகமாக வருமானத்தைப்பற்றி ஒருவர் தானே கொடுக்கும் தகவலிலிருந்துதான் வரி விதிக்கவேண்டியிருக்கிறது. அப்படி இருக்கும்போது வருமானத்தைப்பற்றி ஒருவர் கொடுக்கும் தகவலில் குறைத்துச் சொல்வது சாத்தியமாகிறது. இம்மாதிரி பழக்கம் இந்தியாவில்மட்டுமல்ல, எல்லா நாடுகளிலுமே இருக்கிறது.

இந்தியாவில் 30 கோடி மக்கள் இருக்கும்போது 7 லட்சம்மக்களே வருமான வரி செலுத்துகிறார்கள். அதாவது நூற்றுக்கு ஒருவர்கூட வருமானவரி செலுத்துவதில்லை. ஆனால் அரசாங்கத்தின் மொத்தவரி வருமானத்தில் மூன்றிலொருபாகத்துக்குமேலாக வருமான வரியிலிருந்தே கிடைக்கிறது.

மேனாடுகளில் மொத்த வரி, வருமானத்தில் ஏறக்குறைய பாதித்தொகை வருமான வரியிலிருந்தே கிடைக்கிறது. ஆனால் வரி கொடுப்பவர்களின் எண்ணிக்கை அங்கெல்லாம் அதிகம். கானடாவில் மொத்த ஜனத்தொகையில் 20 பேரும், அமெரிக்காவில் 100-க்கு 35 பேருக்கு மேலாகவும் பிரிட்டனில் 100க்கு 40 பேருக்கு மேலாகவும் வருமானவரி செலுத்துகிறார்கள்.

இந்தியாவில் மிகக்குறைந்த தொகையினர்மட்டும் வருமானவரி செலுத்துவதற்குக் காரணம் வருமானவரி விவசாயமல்லாத மற்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானங்களின்மேல்மட்டும்தான் விதிக்கப்படுகிறது. ஆனால் 100க்கு 75 பேருக்கு மேலாக இந்தியாவில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகலால் விவசாய வருமானங்களின்பேரிலும் வரி விதிக்கப்படாவிட்டால் குறைந்த தொகையுள்ளவர்கள்தான் வருமானவரிசெலுத்துவார்கள். பெரும்பாலானவர்கள் அந்த வரியினால் பாதிக்கப்படாமலே இருந்துவிடுவார்கள்.

விவசாய வருமானங்களின்மேல் வரி விதிக்கும் உரிமை, ராஜ்ய அரசாங்கங்களுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார், அஸ்ஸாம், ஒரிஸா ஆகிய ராஜ்யங்களில் விவசாய வருமானவரி விதிக்கப்படுகிறது. வருமான வரியை மத்திய அரசாங்கம் தண்டல் செய்கிறது. அதிலிருந்து ராஜ்யங்களுக்கு மான்யம் அளிக்கிறது. விவசாய வருமானவரி விதிக்கப்படும் மேற்சொன்ன ஐந்து ராஜ்யங்களிலும், ராஜ்ய அரசாங்கங்களே வரியை விதித்து தாங்களே தண்டல் செய்து எடுத்துக் கொள்ளுகின்றன.

விவசாய வருமான வரி விதிக்கப்பட்ட ராஜ்யங்களில் அதிலிருந்து கிடைக்கும் வருமானம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அதற்குக் காரணம், விவசாயிகளில் அநேகர் ஒரு சில ஏக்கர் நிலங்களே உடைய ஏழைகள். மேலும் அந்நிலங்களிலிருந்து வரும் வருமானமும் அவ்வளவு ஸ்திரமானதல்ல, பருவ மழையைப் பொறுத்திருக்கிறது அவர்கள் வருமானம்.

விவசாயச் செலவுகள், நிலவரி செலுத்தியது, குத்தகை கொடுத்தது, வாங்கின கடன்களுக்கு வட்டி கொடுத்தது முதலியவைகளை மொத்தவருமானத்திலிருந்து நீக்கி, வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு குறைந்த அளவை வரி விதிக்காமல் விட்டு, அதற்கு மேல் கிடைக்கும் வருமானத்தின் மேல் விவசாய வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

மதுவிலக்கு அமுலுக்குவந்ததால் ராஜ்ய அரசாங்கங்கள் வருமானம் போதாமல் கஷ்டப்படும் நேரத்தில் விவசாய வருமான வரி உதவியாயிருக்கும்.

தொழில் முதலிய விவசாயமல்லாத மற்ற துறைகளில் வருமானத்தின் மேல் வரிவிதிக்கப்படும்போது விவசாய வருமானம் மட்டும் பாதிக்கப்படாமல் இருப்பது நியாயமல்ல. அப்படி இருப்பது தொழில் துறைகளில் ஈடுபட்டு தொழில் வளர்ச்சிக்குகாரணமாயிருப்பவர்களை தண்டிப்பது போலாகும். கடந்த சில வருஷங்களில் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் விவசாய வருமானம் அதிகரித்திருக்கிறது. பல நூறு ஏக்கர் நிலங்களைக் கொண்ட மிராசுதார்கள், தொழில் துறையில் மற்றவர்கள்சம்பாதிப்பதற்கு மேலாகவே சம்பாதித்திருக்கிறார்கள். ஆனால் தொழில் வருமானம் உள்ளவர்கள் கடுமையான முறையில் வரி விதிக்கப்பட்டிருக்கும்போது விவசாயத்தில் நிறைய வருமானம் உள்ளவர்கள் கூட வருமானவரி செலுத்தாமல் விடப்பட்டிருப்பதில் அர்த்தமில்லை.

இப்பொழுது சென்னையைப் போன்ற ராஜ்யங்களில் நிலவரி சமவிகிதாசார முறையில் விதிக்கப்படுவதால் சிறியநிலச்சுவான்தார்களுக்கு உண்மையிலேயே அதிக சிரமத்தை கொடுக்கிறது. அதனால் வசூலும் அதிகமில்லை. அப்படியிருக்க நிலவரியையே நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒரு அளவுக்கு மேலாக வருமானம் உள்ள விவசாயிகள் மேல் உயரும் விகிதாசார முறையில் வருமான வரியை விதித்தால் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் வரும். சொற்ப நிலமுடைய விவசாயிகள் வரி செலுத்த வேண்டியிருக்காது. இப்பொழுது இலகுவாக விடப்பட்டிருக்கும் நிறைய நிலமுள்ள மிராஸ்தார்களை நியாயமான முறைப்படி அதிக வரி செலுத்தும்படி செய்யலாம்.

அப்படிச் செய்வதால் இப்பொழுது நடப்பதுபோல் தொழிற்துறைகளில் சம்பாதிக்கும் பணத்தை வருமான வரிக்குப் பயந்து வருமான வரி விதிப்பில்லாத விவசாயத்துறையில் முடக்கும் முறை பயனளிக்காது.

விவசாய வருமானவரி விதிக்காமலிருப்பதற்கு பல காரணங்கள் காட்டப்படுகின்றன. விவசாயிகளில் பெரும்பாலோர் வாழ்க்கைக்கே போதுமான அளவு வருமானம் கிடைக்காதவர்களாதலால் இந்த வரியினால் அதிக வருமானம் எதிர்பார்க்க முடியாது என்றும், பருவ மழையையே பெரும்பாலும் நம்பிக் கொண்டு வாழும் விவசாயிகளின் வருமானம் ஸ்திரமானதல்லவென்றும் கூறப்படுகிறது.

ஆனால் குறைந்த வருமானமுள்ள விவசாயிகளிடமிருந்து இப்பொழுது வாங்குவது போல சாதாரண நிலவரியையும் அதிக வருமானமுள்ளவர்களிடமிருந்து சாதாரண நிலவரியோடு கூட உயர்ந்த விகிதாசார முறையில் ஒரு தனி வரியும் விதித்தால் அதனால் ஒரு கெடுதலும் ஏற்படாது. அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைக்கும்.

அதிக லாப வரி

யுத்தம் போன்ற நெருக்கடியான காலங்களில் அதிக வருமானம் தேவைப்படும்போது வருமானவரியோடு அரசாங்கம் அதிக லாப வரியையும் விதிக்கிறது.

யுத்தம் போன்ற விசேஷ காரணங்களால் சிலருக்கு எப்பொழுதையும் விட அதிகலாபம் கிடைக்கிறது, அதில் ஒரு பங்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுகிறது. யுத்த காலத்தில் அரசாங்கத்தின் செலவு அதிகமாயிருப்பதால் இந்த வரியிலிருந்து கிடைக்கும் வருமானம் அதற்கு மிகவும் உதவியாயிருக்கும். இந்தியாவில் 1940-ம் வருஷம் இந்த வரி முதலில் விதிக்கப்பட்டது. அதிக லாபத்தில் நூற்றுக்கு 50 சதவிகிதம் வரியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. 1941-ல் இந்த வரி நூற்றுக்கு $66\frac{2}{3}$ சத விகிதம் அதிகரிக்கப்பட்டது. ஒரு வருஷத்துக்கு சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய லாபம் 36000 ரூபாயாக கணக்கிடப்பட்டு அதற்குமேல் வரக்கூடிய லாபத்தின்மேலேயே இவ்வரி விதிக்கப்பட்டது. முந்தின வருஷத்தில் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அந்த அளவுக்கு வரி விதிக்கப்படும் அதிக லாபத்திலிருந்து அதற்கு விலக்கு அளிக்கப்பட்டது. 1942-43-ல் அதிக லாப வரியிலிருந்து 26 கோடி ரூபாயும் 1944—45-ல் 78 கோடி ரூபாயும் இந்த வரியிலிருந்து வருமானம் கிடைத்தது.

பிரிட்டனிலும் சென்ற யுத்தத்தின்போது அதிகலாபவரி விதிக்கப்பட்டது. அங்கு அதிக லாபம் முழுவதையுமே அரசாங்கம் வரியாக எடுத்துக் கொண்டு யுத்தத்திற்குப் பின் அதில் ஐந்திலொரு பாகத்தை திருப்பித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

யுத்த காலத்தில் எல்லா நாடுகளிலுமே இந்த அதிக லாபவரி விதிக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்துக்கு அதிக வருமானம் கிடைத்தது மட்டுமல்ல, யுத்த காலத்தில் நாட்டின் தேவைக்கதிகமாக செலாவணியில் அதிக பணம் உலவி அந்த பண வீக்கத்தினால் விலைவாசிகள் விஷம் போல் ஏறுவதையும் தடுக்க முடிந்தது.

தோழர் பராங்குசம்

திருச்சி தோழர் பராங்குசம் சென்ற மூன்று வாரகாலமாக டைப்பாய்ட் சுரத்தால் பாதிக்கப்பட்டு பொன்மலை இரயில்வே ஆஸ்பத்திரியில் படுக்கையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

நில வரி

பூர்வீக காலத்திலிருந்தே இந்தியாவில் விதிக்கப்பட்டு வந்திருக்கும் முக்கியமான வரி இது. சொந்த நிலம் வைத்திருக்கும் பட்டாக்காரரான விவசாயிகள் அரசாங்கத்துக்கு நேரடியாக செலுத்தும் வரி.

ஜமீன்களில் வாழும் விவசாயிகள் தங்கள் மகசூலில் ஒரு பங்கை ஜமீன்தாருக்குக் கொடுத்து விடுகிறார்கள். பின் ஜமீன்தார் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகிறார். ஜமீன்தார் பிரதேசங்களில் வாழும் விவசாயிகளுக்கும் அரசாங்கத்துக்கும் நேரடியாகத் தொடர்பு இல்லை.

ஜமீனுக்குட்படாத பட்டா நிலங்களுக்குச் சொந்தக்காரரான விவசாயிகள் மேல் விதிக்கப்படுவதுதான் நில வரி.

முப்பது வருஷங்களுக்கு ஒருமுறை அரசாங்கம் எல்லா பட்டா நிலங்களையும் உத்தியோகஸ்தர்களை நியமித்துப் பார்வையிட்டு ஒவ்வொரு இடத்திலும் நிலத்தின் தரத்தையும் அதன் மகசூலையும் கணக்கிட்டு அதற்குத் தக்கவாறு வரி இவ்வளவென்று நிர்ணயிக்கிறார்கள். அடுத்த 30-வருஷங்களுக்கு திரும்பவும் இவ்விதம் பார்வையிட்டு வரியை மாற்றுகிறவரை அதே வரியை விவசாயிகள் செலுத்திக் கொண்டு வருகிறார்கள்.

இம்மாதிரி 30-வருஷங்களுக்கு ஒரே வரி விகிதம் இருப்பதால் விவசாயிகளுக்கு தாங்கள் எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்று நிச்சயமாகத் தெரிந்து விடுகிறது. வருமான வரி போன்ற மற்ற வரிகள் விஷயத்தில் யாரும் இப்படி நிச்சயமாக இருக்கமுடியாது.

ஒரு ஏக்கருக்கு இவ்வளவென்று நிலவரி சம விகிதாசார முறையில் தண்டப்படுகிறது. மொத்தம் ஒருவரிடம் எத்தனை ஏக்கர் இருக்கின்ற தென்பதைப்பற்றிக் கவலையில்லாமல் இந்த வரி தண்டப்படுவதால், சொற்ப நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு அதிக சிரமும், நிறைய நிலங்கள் வைத்திருப்பவர்களுக்குப் பளுவே இல்லாமலும் இருக்கிறது. உதாரணமாக, ஏக்கருக்கு 5 ரூபாய் வரி என்று இருந்தால், 3 ஏக்கர் வைத்திருப்பவர்கள் 15 ரூபாய் வரி செலுத்துகிறார்கள். 3 ஏக்கர் வருமானம் 300 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், 300 ரூபாய் வருமானத்திலிருந்து 15 ரூபாய் வரி செலுத்துகிறார்கள். 100 ஏக்கர் வைத்திருப்பவருக்கு 10000 ரூபாய் வருமானம் இருக்கும். அவருக்கு 500 ரூபாய் வரி இருக்கும் இந்த இருவருக்கும் ஏற்படும் வரிப் பளுவை ஒப்பிட்டுப் பார்த்தால் சொற்ப நிலக்காரருக்கு அதிக சிரமமும் அதிக நிலக்காரருக்கு சிரமமே இல்லாமலிருப்பதும் தெரியும்.

விவசாயிகளுக்குச் சிரமமில்லாத வகையில் நிலவரி ஒரேயடியாகத் தண்டப்படுவதில்லை. அறுவடையான பிறகு, அதாவது விவசாயிகள் வசம் பணம் இருக்கும்போது, அதுவும் மூன்று அல்லது நான்கு தவணைகளில் நிலவரி தண்டப்படுகிறது.

வரித்தொகை முப்பது வருஷங்களுக்கு ஒருமுறை நிர்ணயிக்கப்படுவதால் சில வருஷங்களில் மழை இல்லாமல் மகசூல் இல்லாவிட்டாலும், அல்லது விலைவாசிகள் இறங்கி விட்ட காரணத்தாலும், வரியை செலுத்தமுடியாமல் சிரமப்படுகிறார்கள். அதனால் அரசாங்கம் அடிக்கடி அவர்களுக்கு வரி வஜா செய்தும் நிவாரணம் அளித்தும் உதவி செய்ய நேரிடுகிறது. நிலவரி வசூல் திடீரென்று குறைந்தோ அல்லது சில பகுதிகளில் நின்றேபோய் விடக்கூடுமாதலால் அரசாங்கம் இதை அதிகம் நம்பிக்கொண்டிருக்க முடிவதில்லை.

நிலவரியை நிர்ணயிக்க 30 வருஷங்களுக்கு ஒருமுறை எல்லா நிலங்களையும் உத்தியோகஸ்தர்கள் பார்வையிடுவது நடைமுறையில் அரசாங்கத்துக்கு அதிக செலவுக்கும் காரணமாயிருக்கிறது. மேலும் இந்த வரி வசூலுக்காக நிரந்தரமாக பல உத்தியோகஸ்தர்களை வைத்துக் கொண்டிருக்கவும் வேண்டியிருக்கிறது. ஆனால், அநேக ராஜ்யங்களில் கிராமத்திலுள்ள கணக்கர், கிராம முன்சீப் முதல் தாசில்தார், கலெக்டர்வரை வரிதண்டுவது மட்டுமல்ல, நீதி இலாக்காவைச் சேர்ந்த வேலைகளையும் மேற்கொண்டு செய்து வருவதால் வரி தண்டும் செலவு அதிகமில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

நிலவரியை அரசாங்கம் வேண்டும் பொழுது அதிகரித்துக் கொள்ள முடியாது. அதற்கு மாறாக இயற்கையின் கோளாறுகள் ஏற்படும் போதெல்லாம், வரி வஜா செய்வதன் மூலம் நில வரி வசூலில் பள்ளம் விழுவதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

நிலவரியிலிருந்து ராஜ்ய அரசாங்கங்களுக்கு இருபது முப்பது வருஷங்களுக்கு முன்னால் கிடைத்த வருமானம் பெரிதாகத் தோன்றியது. அது மற்ற வகைகளில் கிடைத்த வருமானத்தைவிட அதிகமாயிருந்தது. ராஜ்ய அரசாங்கங்கள் முக்கியமாக இந்த வரியையே நம்பிக்கொண்டிருந்த காலம் அது.

கடந்த 30 ஆண்டுகளில் நிலவரி வருமானம் ஒரு சிறிதும் வளரவே இல்லை. அப்பொழுது கிடைத்த வருமானமேதான் இப்பொழுதும் ராஜ்யங்களுக்குகிடைக்கிறது. ஆனால் இந்த 30 வருஷங்களுக்குள், நில வரியைவிட அதிக வருமானம் தரக்கூடிய விற்பனை வரிபோன்ற பல புதிய வரிகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. நில வருமானத்தின் முக்கியத்துவம் இப்பொழுது குறைந்து விட்டது. உதாரணமாக 1938-39-ல் ராஜ்ய வருமானங்களுக்கு 26 கோடி ரூபாய் கிடைத்தது. 1949—50—ல் நிலவரி வருமானம் 27 கோடி ரூபாய். ஆனால், 1938-39-ல் விற்பனை வரி ஒரு சில இடங்களில்தான் லேசாக விதிக்கப்பட்டு இருந்தது; 1949-50-ல் விற்பனை வரியிலிருந்து ராஜ்யங்களுக்கு ஏறக்குறைய ரூ. 38½ கோடி வருமானம் கிடைத்தது.

செலவு அவ்வளவு அதிகமாக இல்லாத அந்த காலத்தில் நிலவரியிலிருந்து கிடைத்த வருமானம் கணிசமானதாகத் தோன்றியதில் ஆச்சரியமில்லை. ஆனால், செலவு அதிகரித்திருக்கும் இந்நாட்களில் நிலவரி வருமானத்தை முழுவதுமோ அல்லது பெரிய அளவுக்கோ நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

நிலவரியோடு கூட ஓரளவுக்கு மேல் அதிக நில வருமானமுள்ளவர்களிடமிருந்து உயரும் விகிதாசார முறையில் வருமான வரியும் சேர்த்துத் தண்டினால ராஜ்யங்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கும்.

156-பக்கங்கள் விலை ரூ 1.
20% கழிவு உண்டு.
விவரங்களுக்கு:—
சேகர் பதிப்பகம்
முசிறி : : திருச்சி.

ஆச்சாரியார் 'அகவல்'

பாதுகாப்பு என்ற பெயரால் டில்லி சர்க்கார், ஏராளமான பணத்தை விரயம் செய்கிறது.

இதில் பாதித்தொகையை மக்களின் நலனுக்காகச் செலவழித்தால் எவ்வளவோ நன்மைகள்மலரலாம்.

*

டில்லி சர்க்கார் ஆண்டுதோறும், ராணுவத்துக்கென பல கோடிக்கு மேல் செலவிட்டு வருவதை, சிந்தனைத் தெளிவுள்ளோர், அனைவரும் கண்டித்து வருகின்றனர்.

"சோற்றுக்கழுகின்றனர், மக்கள் விண்ஜபம் ஏன்!"

"ராணுவம் தேவைதான். ஆனால் இந்த அளவில் ஏன்?"

"சமாதானம் பேசும் நாம், சண்டைக்கு வேண்டிய ஆயத்தத்தில் ஈடுபடுவானேன்?"

இவ்விதம், பற்பலக் கண்டனங்கள், கூறப்பட்டு வருகின்றன. ஆனால், இது எதையும், டில்லி சர்க்கார் சட்டை செய்யவில்லை. சர்க்கார் சட்டை செய்யாததுமட்டுமல்ல, சர்க்காரின் கட்சியைச் சேர்ந்த தேசீய நண்பர்களோ, இவ்விதம் கூறும் நம்மை நோக்கிச் சீறினர்.

"தெரியாமலா செலவழிப்பார்! பக்கத்தில் பாகிஸ்தான் பயமிருக்கிறதே!" — இதுபோலப் பலப்பல பதில்கள் தர முயன்றனர்.

இப்போது பண்டிதநேருமீதே, குற்றம் சாட்டுகிறார், ஆச்சாரியார்.

'வரவு செலவைபற்றிக் கவலைப் படாது பண்டிதநேரு செலவழிக்கிறாராம்!—ஆச்சாரியார் கூறுகிறார்.

அதுவும் எத்தகைய நேரு? — அகில உலகமும் ஆயுதச் செலவுக்காக அழிக்கும்பணத்தைக்குறைக்க வேண்டுமெனக் கூறிய நேரு.

அவர் இவ்விதம் ராணுவத்துக்காகச் செலவழிக்கலாமா? — கேட்கிறார், ஆச்சாரியார்.

கேட்பதோடுமட்டுமல்ல, பண்டிதரின் அறிவு வெளிநாட்டாரின் தொடர்பால் மழுங்கிவிட்டதாகவும் கூறுகிறார்.

வெளிநாடுகளைப் பார்த்து, ஒரு போது, நேரு புத்திமதி சொன்னார்.

இப்போது அந்த நாடுகள்திகைத்து நிற்க. இவருக்கு புத்திமதி சொல்ல ஆள் தேவைப்படுகிறது!

சேலத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில், வெகு சாதுர்யமாக, இவ்வண்ணம் வெளியிட்டிருக்கிறார் ஆச்சாரியார்.

இவ்விதம், பாதுகாப்புக்கெனச் செலவிடும் பணத்தைக் குறைத்தால், ஏராளமான திட்டங்களைத் தீட்டி, நாட்டைச் சோலையாக்க முடியுமாம்! பணமில்லையென்று பல்லவி பாட வேண்டிய நிலை ஏற்படாதாம்!!

அன்று, நாம் சொன்னோம்—அப்போது ஆச்சாரியார் கவர்னர் ஜனரலாகயிருந்தார்.

இப்போது, அவர் சொல்கிறார்—காரணம், இன்று அவருடைய 'இடம்', டில்லியில் அல்ல! சென்னையில்!!

ஒட்டிக் கொண்டிருந்த போது, இந்த ஆலோசனையை உரைக்கவில்லை, ஆச்சாரியார்.

எட்ட வந்து வேதனைப் படும் போது, உரைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

டில்லியிலிருந்த போது, மாளிகைவாசம்! மனோரம்யமான வாழ்வு!!

சென்னையிலோ, டில்லியை நோக்கிப் 'பிச்சை' கேட்டபடி நிற்க வேண்டிய நிர்க்கதியான நிலை! சோகமான வாழ்வு!!

அதனால்தான், உண்மை விளக்கங்கள், ஓடி வருகின்றன.

இந்த விளக்கங்களை, இன்னும், அறியாமல், எத்தனை தேசியத் தோழர்கள் இருக்கிறார்கள்? டில்லியின் சுயரூபம், நெருங்கினால்தான் தெரியும்போலும்!

★

கிருஷ்ண லீலை!

லண்டனில் இந்திய ஹைகமிஷனராயிருந்த கிருஷ்ண மேனன், டில்லி மேல்சபையின் உறுப்பினராக்கப்பட்டிருக்கிறார்.

கோபால்சாமி அய்யங்கார் இறந்ததால், காலியான இடம், இவர்மூலம் நிரப்பப்பட்டிருக்கிறது.

டில்லி மந்திரி சபையில் இடமளிக்கும் நோக்கத்தோடுதான், இவர், கவுன்சில் உறுப்பினராக்கப் பட்டிருக்கிறார்.

மேனன், பண்டிதரின் உயிர்த் தோழராம்! எனவே, எப்படியும், டில்லி மந்திரியாவார்.

இவர், டில்லி மந்திரியானால், டில்லி காரியாலயத்திலுள்ள ஒருவர் நிச்சயம் கண்ணீர் சிந்துவார்! "ஏ! துரதிர்ஷ்டம்வாய்ந்த பூமியே—இவர்களா உன்னைக் காப்பவர்கள்?" என்று வேதனைப்படுவார்!!

இந்திய சர்க்காரின் வரவு செலவுகளைத் தணிக்கை செய்யும் பெரிய பொறுப்பிலிருக்கும் ஆடிடர் ஜனரலைத்தான் குறிப்பிடுகிறோம்.

லண்டனில் மேனன் நடாத்திய 'கிருஷ்ண லீலை'களையும், அதனால் இந்திய சர்க்காரின் கஜானாவுக்கேற்பட்ட வீண் செலவையும் குறித்து, ஆடிடர் ஜனரல், பக்கம் பக்கமாக 'ரிபோர்ட்' செய்திருக்கிறார்—முன்பு.

ஆனால், அப்படி விரயம் செய்தவர், இன்று மந்திரியாகப்போகிறார்! காரணம்—தகுதியல்ல, யோக்யதாம்சம் அல்ல, தியாகி என்பதால் அல்ல; நேருவுக்கு நண்பர் என்பதால்!!

டில்லியில், இப்போதே விசித்திரமான 'லீலை'களை அறிகிறோம்—கிருஷ்ணனும் சேர்ந்துவிட்டால், கேட்கவேண்டாம்!!

★

திராவிட முன்னேற்றக் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும்

நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தும் நல்லதோர் அரசியல் நூல்
விலை 4-அணா

விபரங்களுக்கு:—
தாய்மைப்பதிப்பகம்,
72, குருவப்பச்செட்டித்தெரு,
சென்னை—2.

டால்மியாபுரம் போராட்டத் துவக்க விழா

20—5—53 புதன்கிழமை மாலை 6 மணிக்கு டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற் சங்க கட்டிடத்திற்கருகில் அமைக்கப்பட்ட பந்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில டால்மியா சிமெண்ட் தொழிற்சங்க உபதலைவர் தோழர் ஐ. மைனுதீன் அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தனது உரையில் டால்மியாபுரம் என்ற பெயரை "கல்லக்குடி" என்று மாற்றி அமைக்க வேண்டுமென்றும், அந்த போராட்டத்தை துவக்கியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 2000 தொழிலாளர்களும் எல்லாவகையிலும் ஆதரவு கொடுப்பதாக உறுதி கூறினார். தொடர்ந்து தோழர் எம். எஸ். மணி, எ. பி. தர்மலிங்கம், அ. பொன்னலம்பலனார், கலைஞர். மு. கருணாநிதி ஆகியோர்கள் டால்மியாபுரம் என்ற பெயரை மாற்ற வேண்டியதின் அவசியத்தை விளக்கிப் பேசினார்கள். பின்கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கல்லக்குடி என்னும் சிற்றூரிலுள்ள ரயில்வே நிலையத்திற்கும், தஞ்சல் நிலையத்திற்கும் வடநாட்டு முதலாளியான டால்மியாவின் பெயரால் டால்மியாபுரம் என்று பொறிக்கப்பட்டிருப்பது தமிழர்களை இழிவு படுத்துவதாக இருப்பதால் உடனடியாக டால்மியாபுரம் என்ற பெயரை மாற்ற வேண்டுமென அரசியலாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

2. பிறகு இரவு 10 மணிக்கு கல்லக்குடி தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு வீடிழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களால் "இன்றைய உலகம்" என்னும் நாடகம் புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரன் அவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது. மேற்படி நாடகத்தில் வசூலான தொகையை வீடிழந்த மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஐவர் கொண்ட கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

✲

"முடிசூட்டு விழா!"

★

வைரம்! வைடூரியம்! கோமேதகம்!

ஒன்றல்ல, இரண்டல்ல; 3000 கற்கள்!

மொத்தவிலை சுமார், 25-லட்சம் பவுன்!!

*

பிரிட்டிஷ் ராணியாக முடிதரித்துக் கொள்ளப்போகும் எலிசபெத் தேவியார், தாங்கப்போகும், மணிமுடியின் சிறுகுறிப்பு இது. இவ்வளவு பெருமிதமான முடியினை, மிகப்பெரும் ஆடம்பரத்தோடு, சாமன்வெல்த் நாடுகள் கலந்து கொள்ள, உலக நாடுகள் பார்க்குக் கூற, எலிசபெத் அம்மையார், ஏற்கப்போகிறார்கள். இந்த விழாவுக்கென கடந்த ஆறுமாத காலமாக, பிரிட்டிஷ் அரசாங்கம், திட்டங்கள் பல தீட்டி, செலவுக்கான பணத்தை ஒதுக்கி, பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். ஒரு சிறு மணி முடி! அதன் விலை, 25-லட்சம் பவுன்!! அதனைத் தலையில் சூடப்போகும் நிகழ்ச்சி, ஒரு சில நிமிடங்களில் முடிந்துவிடும். ஆனால் அதற்கெனச் செலவழிக்கப்படும் சர்க்கார் பணமும், தீட்டப்படும் திட்டங்களும், ஏராளம் — ஏராளம். ஜனநாயகத்தின் தொட்டில் என்று பாராட்டப்படும் பிரிட்டன் செய்கிறது, இத்தகைய கோலாகலத்தை. அதனை வேடிக்கைப்பார்க்க, எல்லா நாடுகளிலிருந்தும், ஆட்சியாளர்கள் செல்லுகின்றனர்.

*

பண்டிதநேரு, பயணமாகிவிட்டாராம். அவரது குமாரி இந்திரா, 'நான்கு நாட்களுக்கு முன்னதாகவே வந்திருந்து விவாக சுப முகூர்த்தத்தை நடத்திவைக்க வேண்டும்' என்பது போன்ற அழைப்பு இல்லாமலிருந்தும், பல தினங்களுக்கு முன்னதாகவே, தனது குழந்தைகளுடன், லண்டனுக்குச் சென்று விட்டார். சென்றதோடுமட்டுமின்றி, பிரிட்டிஷ் துப்பறியும் போலீசாருக்கு, ஒரு நாள் அலைச்சலையும் தந்திருக்கிறார். இந்திராவின் பையன் 6-வயதுச் சிறுவன், எங்கோ போய்விட்டானும்! முடிசூட்டுவிழாவுக்கு வந்திருக்கும் இந்திப் பிரதமரின் பேரனாயிற்றே?— பிரிட்டிஷ் போலீஸ், எங்கெல்லாமோ அலைந்து, கடைசியில் வீட்டிலிருந்து இரண்டு மைலுக்கப்பால் கண்டுபிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள்!

*

முடிசூட்டு விழாவின் வைபவத்தில இந்தியக் கப்பற்படையும் கலந்துகொள்ளுமாம். இதற்காக ஆகும் செலவு குறித்தும், இது தேவைதானா என்றும், பார்லிமெண்டில் பலர் கண்டித்தனர். இதற்குச் சர்க்கார் அளித்த பதில், "பல நாட்டுக் கப்பற்படைகளுடனும் பழகுவதற்கு நல்ல சந்தர்ப்பம். அதற்காகவே, அனுப்பியுள்ளோம்" என்பதாகும்.

முடிசூட்டுவிழா சம்பந்தமான விருந்தொன்று, அயர்லாந்தில் நடைபெற்றதாம்—பிரிட்டிஷ் சர்க்கார் சார்பில். அந்த விருந்தில், அயர்லாந்துத் தலைவரான டிவேலரா கலந்துகொள்ள மறுத்துவிட்டார். தங்களுடைய தீவின் தனிச் சுதந்திர வேட்கையைக் குறைக்கும் போக்கில் பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்து கொள்வதைக் கண்டிக்கவே, அவர்கள் கலந்துகொள்ளவில்லையாம். விருந்தில், டிவேலரா, கலந்து கொள்ளவில்லை! அயர், இங்கிலாந்துக்கு அருகேயிருப்பது!! ஆனால் ஆறாயிரம் மைலுக்கப்பாலுள்ள, பண்டிதர், பறந்து சென்றிருக்கிறார். எஜமான விசுவாசம், மறக்கக்கூடாதல்லவா?

*

முடிசூட்டு விழாவுக்கு, லண்டனில் பிரமாதமான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. ஆனால், இதே நேரத்தில் ஸ்காட்லாந்தில் வழக்கொன்று, முடிசூட்டு விழா குறித்து, நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாம். இந்த வழக்கை நடத்துபவர், ஸ்காட்லாந்து பிரிட்டனிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்ற கொள்கை கொண்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவராம். இரண்டாவது எலிசபெத், என்று அழைக்கப்படுவது சட்டப்படி பொருத்தமானதல்ல!— என்று, இவர், ஒரு பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்: நீதிமன்றம், இந்த வழக்கை தள்ளிவிட்டதென்றாலும், அவர் உயர்நீதி மன்றத்தை நாடிச் சென்றுள்ளாராம்!

★

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காஞ்சிபுரத்தை பொறுத்தமட்டில் வசதியும் வாய்ப்பும் பெற்றோர் சிலர், ஐந்து ஏகரின் அதிபதிகளாயினர். அவர்களைக் குறிப்பிட்டு, 'ஐயன்மீர்! ஏனிந்த, நிலம்? திருப்பிக்கொடுத்து விடுங்கள்! தியாகத்துக்கேன் கூலி?' என்று கேட்டு பொதுக்கூட்டங்களிலும், துண்டறிக்கைகள்மூலமும், நகரக் கழகத்தார், வேண்டுகோள் விடுத்தனர். கேட்பரா? ஏற்கத்தான், முடியுமா? இதே நிலைதான் எங்கும். வாய்ப்பும் செல்வாக்கும் மிக்கோர், 'அகப்பட்டவரையில் லாபம்!' என்று சுருட்டிக்கொள்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து வருகின்றனர்.

பெரிய வியாபாரி! ஆஸ்திபூஸ்தி ஏராளம்! அத்தகைய ஒரு நபர் 'தியாகமான்யம்' கோருகிறார்.

அவரையணுகி, நெருங்கிய நண்பராக இருந்தால் விசாரித்துப் பாருங்கள் — "என்னங்க. நமக்கு இதுதாங்க, சான்சு! அவனவன் என்னென்னமோ, சுருட்டுறான். மந்திரிங்கிறான், ஒருத்தன்! மந்திரிக்குக் காரியதரிசிங்கிறான்! எப்படியெப்படியோ, பணம் சேர்க்கிறான். நம்ப அதிர்ஷ்டம், இந்த அளவோடெ, நிக்குது" என்று விசாரப்பட்டுக்கொள்வாரே தவிர, 'நாட்டின் சொத்து நமக்கேன்?' என்கிற உணர்ச்சி எதிரொலிக்காது.

எல்லோரும் சுருட்டுகிறார்கள்!— இந்த எண்ணம், காங்கிரஸ் கூடாரத்தில் அலை மோதுகிறது — அதுவும், மிக மிக அதிகமாக.

'ஐந்து ஏகர்' கூடாதென்கிறார், ஆட்சியிலிருப்பவர்!

அவர் ஆட்சியிலிருக்கிறார்—அகப்பட்டதைச் சுருட்டுகிறார். நாம் மட்டும் சொத்தையோ? — என்கிறார், கட்சியிலிருப்பவர்.

இந்த 'அடிபிடி'ச் சண்டை, காங்கிரஸ் கட்சியில், சர்வசாதாரணமாகிவிட்டது.

ஆட்சியிலிருப்போர்மீது கட்சிப் பிரமுகர்களுக்கு, எரிச்சல்.

கட்சிக்காரர் மீது, ஆட்சியாளருக்கு, அதிருப்தி.

இந்த இக்கெட்டான, நிலை, காங்கிரஸ் ஆட்சியிலும் கட்சியிலும் வளர்ந்திருக்கிறது.

இந்த உண்மையை நாம்கூறினால், 'இவர்கள் இப்படித்தான் கூறுவர்!', என்பார்கள், தேசிய நண்பர்கள்.

இந்த உண்மையை ஆந்திரக் காங்கிரஸ் தலைவரான சஞ்சீவி ரெட்டி கூறுகிறார். தோழர் சஞ்சீவி ரெட்டி, ஆந்திரக காங்கிரஸின் தலைவர்—ஆகவே, அவர் கூறுகிறார்: "கவர்னர் ஜெனரல் ஆயிரமாயிரமாகப் பணம் வாங்கிக் கொள்ளுகிறாரே! அது மட்டும் கவுரவமோ? ஏதோ அஞ்சு ஏகர் கேட்டால், தேசபக்திக்கு எப்படி குறைவேற்பட்டுவிடும்! அவர்களெல்லாம் அப்படி வாங்கும்போது, நாங்கள் இதைக்கூடக் கேட்கக்கூடாதா!", என்கிறார்.

விஜயவாடா தாலுகா அரசியல் தியாகிகள் மாநாட்டில் கடந்த 21-ந் தேதி பேசுகையில், இவ்வண்ணம், கேட்கிறார்.

கவர்னர் ஜெனரல்—கவர்னர்—மந்திரிகள்—இவ்விதம், பலர், சம்பாதிக்கின்றனர்.

சாதாரண எங்களுக்கேன், ஐந்து ஏகர், தரக்கூடாது?

சஞ்சீவி ரெட்டி, கேட்கிறார்! ஆந்திரத் தலைவர், இவ்விதம் கேட்கிறார்!!

'ஜனநாயகம்', பூத்துக் குலுங்குவதாகப் பண்டித நேருவைப்பேட்டி கண்ட அமெரிக்க அரசு உறுப்பினர் டல்லஸ், வாயார, நாவாரப் புகழ்கிறார்.

ஆனால் அந்த ஜனநாயகத்தைத் தூக்கிக்கொண்டிருக்கும் அரசியல் கட்சியின் நிலையே, இவ்விதம் இருக்கிறது.

ஒரு பக்கம்—பதவிகள் பேரால் பணம் கொள்ளை!

மற்றோர் பக்கம் — கட்சியைக் காட்டி, சொத்து கொள்ளை!!

அதுவும் ஒருவரையொருவர் போட்டி போட்டவண்ணம், உரிமையோடு கொள்ளை அடிக்கிறார்கள்.

இவர்கள் கொள்ளைக்குப் பணம் செலுத்திக்கொண்டிருக்கும் மக்களோ, எலும்புந் தோலுமாகிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்த்துக் கேட்டால், கட்சியும் சீறுகிறது! ஆட்சியும் பாய்கிறது!!

காங்கிரசை முறியடியுங்கள்!

விக்கிரவாண்டி - கோவிந்தசாமி வேண்டுகோள்

—✲—

31—5—53 தேதியன்று நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபை இடைத்தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகவும், முற்போக்குக் கட்சிகள் சட்டசபையிலுள்ள ஐக்கிய முன்னணி ஆகியவைகளின் ஆதரவு பெற்றுத் தேர்தலில் போட்டியிடும் தோழர் கே. என். ரத்தினம் அவர்களுக்கு கல்லக்குறிச்சி தொகுதி வாக்காளர்தங்கள் உயரிய வாக்குகளைப் பெருவாரியாக அளித்து வெற்றியுறச் செய்ய வேண்டுகின்றேன்.

நம் நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பஞ்சம், பட்டினி வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளை நிவர்த்திக்க முடியாத காங்கிரஸ் சர்க்காரும், ஜனவிரோத கட்சியான காங்கிரஸ் மந்திரி சபைக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாவும் ஆதரவு அளித்துவரும் கட்சிகளின் போக்கினை நான் விவரிக்கவேண்டியதில்லை. விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பொதுவாகமக்களுக்கு அன்றாடம் ஏற்பட்டுவரும் தொல்லைகளே இதற்கு சான்றாகும்.

எனவே, இந்நிலையில் இந்த இடைத்தேர்தல் நம் தென்னாற்காடு மாவட்டத்தில் ஓர் சோதனையே யாகும் என்றால் மிகையாகாது. மக்கள் காங்கிரசையோ அல்லது காங்கிரசை சென்ற தேர்தலில் தோற்கடித்த கட்சிகள், இப்பொழுது மக்கள் விருப்பத்துக்கு மாறாக சட்டசபையில் காங்கிரஸ் சர்க்காரை ஆதரித்துக்கொண்டு, இப்பொழுது இந்தத் தேர்தலில் காங்கிரசுடன் போட்டியிடுவதுபோல் பாசாங்கு செய்தாலும் பொதுமக்கள் ஏமாந்து ஓட்டு அளிக்கமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இவர்களில் யார் ஜெயித்தாலும் ஒன்றுதான். மக்கள்பிரச்னை தீராது.

ஆகவே வாக்காளர்கள் அனைவரும் நாட்டின் நிலையை உணர்ந்து, காங்கிரஸ் ஆட்சி பீடத்தாருக்கும், அவர்களை ஆதரிக்கும் கட்சியினரின் சமய சஞ்சீவித்தனமான பிற்போக்கினை எதிர்க்கும் வகையில் நேர்மையை நிலைநாட்டும் முறையில் தோழர் கே. என். ரத்தினம் அவர்களுக்கு "தாமரைப்பூ" பெட்டியில் உங்கள் வாக்குகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.